1968 ஆகஸ்ட் 21]

திரு. டி. மார்டின் : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், சார். நாங்குனேரி தாலுகாவைச் சேர்ந்த உவரியிலும், திருச்செந்தூர் தாலுக்காவைச் சேர்ந்த பெரியதாழை என்ற கிராமத்திலும் அதிகமாக மீன்கள் பிடிக்கிறார்கள். குறிப்பாக. பெரியதாழையில் கடலில் இருக்கக்கூடிய பாறைகளின் காரணமாக, காற்றுக் காலங்களில், திடீரென்று பாறைகளில் படகுகள் மோதுவதன் காரணமாக, மீனவர்களுக்குப் பெருத்த பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. இந்த நிலையை உத்தேசித்து, பெரியதாழையிலும் உவரிப் பகுதியிலும் மீன் பிடிக்கும் கிராமங்களிலே தோணியாவது படகுகளை நிறுத்தக்கூடிய அளவுக்கு வசதி செய்து கொடுக்கும்படியாக, நிலங்களை சர்க்கார் நில ஆர்ஜிதச் சட்டத்தின் மூலமாக எடுத்து, மீனவர்களுக்கு வழங்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கடல் அரிப்பு ஏற்பட்டதன் விளைவாக, அந்த உவரி என்ற கிராமம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதியை 'நாடார் உவரி' என்றும் வேறு பகுதியை 'பரவர் உவரி' என்றும் குறிப்பிட்டு இந்த நிலங்கள் நாடார் உவரிக்குத்தான் சொந்தம் என்ற நிலையை உருவாக்கிவிட்ட காரணத்தினாலே, முதலாளிகள் வசம் அதனுடைய மேல் பார்வை இருப்பதால், பரதவர் நிவாரண சங்கத்தினர் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து வேறு நிலத்தைக் கேட்டார்கள், பெற்றிருக்கிறார்கள். இதற்குச் சம்பந்தம் இல்லாததால், அந்தப் பிரச்சினையைத்தீர்க்க முடியாத நிலை இருக்கிறது. கனம் அங்கத்தினர் இப்பொழுது குறிப்பிட்ட பிரச்சினையைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்றால், அதைப்பற்றித் தனியாகக் கடிதம் எழுதி அனுப்பலாம்.

வேளாண்மை பொறியியல் தொழிலாளர்கள்

* 70 வினா—**திரு. என். மருதாசலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தமிழ்நாடு அரசினர் வேளாண்மை பொறியியல் தொழிலாளர்கள் தங்கள் குறைகளைப்பற்றி 23—7—1967-ம் தேதி சர்க்காருக்கு விண்ணப்பித்து உள்ளார்களா?

(இ) ஆமெனில், அதன்மேல் சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். மருதாசலம்: கோவையிலுள்ள விவசாயப் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தனியார் பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதைவிட குறைவாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே தனியார் பண்ணைகளில் கொடுக்கக்கூடிய கூலியை சர்க்கார் பண்ணைகளிலும் கொடுப்பார்களா? அங்கு வேலை செய்யும் வாச்மென் போன்றவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அரசாங்கப் பண்ணைகளில் பணி புரிகிறவர்களுக்கு எபபோதும் வேலை கொடுக்கப்படுகிறது. ஆனுல் தனியார் துறையைப் பொருத்தவரையில் அவர்களுககு அவசியமானுல் வைத்துக் கொள்வார்கள், அவசியமில்லை என்ருல் வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். ஆகவே கூலி உயர்வு பற்றிய பிரச்னை வருவதற்கு இடமில்லை. மற்றபடி அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போன்று 12 கோரிக்கைகள் இருக்கின்றன. அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அவாகளுக்கு பதில் அனுப்பப்படும்.

திரு. எம். பூபதி: பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். இந்தப் பிரச்னை எப்போது முடியும்? ஏனெனில் ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. ஆகவே அதை உடனடியாக முடிக்க தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சில பிரச்னைகள் உடனடியாக தீர்க்கக்கூடிய பிரச்னைகளாக இருக்கின்றன. சம்பள விகித உயர்வு என்றிருப்பதால் அதைப்பற்றி பரிசீலனை செய்த பிறகு தான் முடிந்த கட்டத்திற்கு வர முடியும். விரைவில் அவர்களுக்கு பதில் அனுப்பப்படும்.

திரு. பி. வேலுசாமி: விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச கூலி எவ்வளவு என்று நிர்ணயிக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

DR. H. V. HANDE: Sir, how many employees are there in this department? The Minister said that there were twelve grievances. Will he be pleased to state the most important grievances or, if possible, all the twelve grievances?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதைப்பற்றி விவரமாக சொல்லவேண்டுமென்ருல் சபாநாயகர் அவர்களின் அனுமதி கிடைக்காது. நேற்றே ஒரு தடை உத்தரவைப் போட்டிருக்கிருர்கள். முழு விவரம் வேண்டுமானுல் தனியாக எழுதிக் கேட்கலாம்.

முறைப்படுத்தப்பட்ட சந்தைக் குழு

* 71 விஞ.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் விவசாய விளை பொருள் ஒழுங்கு மார்க்கெட் கமிட்டி (Agricultural Produce Regul te Market ng Committee ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஆம், இச் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.